319

சித்தராரூட

நொண்டிச்சிந்து

16 AP 19

சென்னை திருவொற்றியூர்
ள் விலாச அச்சுக்கூடத்திற்
பிக்கப்பெற்றது
1928

O. , 1 S
N128.
180658.

உ

சிவமயம்.

சித்தாரூட

நொண்டிச் சிந்து.

மதுரை புதுமண்டபம், புஸ்தகஷாப்

எஸ். வேணுகோபால் நாயுடு அவர்களால்

சென்னை திருவொற்றியூர்

தாகை. சரவண முதலியார் அவர்களால்

கலைமகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது

1928

10 APR 1929

சாணாகம்மூக்கன்புடையான் மண்டலி சவுடிமயக்கா
ரமண்ணுளிசாரை

வாணாளை வாட்டுஞ்செய்யான் இருதலைமணியன்சில
ந்தி புலிமுகப்பூச்சி

தேட்புள்ளிவண்டு பூரான் பச்சோந்தி செவ்வட்டை
பேய்நரிநாய் செருச்செயலி

வாட்பல்லுப்பூனை புலி பிலவங்கம் வனத்திற்றவளை
ட்டைவாசிமுதலே

அரணைநண்டுத்தெறுக்கால் முதலியவை யல்லாதசெந்
துவமநேகமுண்டு

உரகத்தின் பெருநிறமும் சாதியும் ஊணும் மணமும்
வையுறைவிடமும்

படமெடுத்தாடுங்குறியும் முட்டையிட்டுப்பருவமறி
ந்துபொரித்தூரும் பரிசும்

விடமுறுதந்தக்குறியும் கடிச்சிடும் விதமுங் கடித்தத
டிமீளாவிடமும்

காலக்கடியடக்கக்குறிவேகக்குறி கழறிய தூதரிற்கா
ணுங்குறியும்

சிலமூள்ளமணிமந்திரத்தால் கருடத்தியானத்தால்
மருந்தினாற்றீர்க்குஞ்செயலும்

குருமலரடிவணங்கி வகையாகக் கூறுகிறேனிந்தக்கு
வலயத்தில்

பாம்பின் பிறப்பு

மரைமலர்ப்பொகுட்டுறைவோன் பயந்தருள்மகவெ
னவந்துதித்த மாதவத்தினோன்
காசிபன் மனைவியரில்மிக்கான கத்துருவயிற்றுதித்த
கட்செவிகள்
பேசிடுபெயரனந்தம் வாசுகிபெலத்த தட்சகன்கார்க்
கோடன்பத்மன்
மாபத்மன்சங்கபாலன் குளிகள் மானுகமிவை யெட்டு
ந்தானுமிவற்றுள

சாதிப்பிரிவு.

திடக்கண்ணனந்தனுடன் குளிகனும் செகத்தில்வேதி
யரென வகுத்தனரே
வாசுகிசங்கபாலன் இருவரும்மன்னவரா மென்றார்
முன்னவர்கள்
தேசுறுதட்சகன்மா பத்மனிவர்தெளித்த வணிகரெ
னவிதிம்பினரே
சூத்திரக்கார்க்கோடன் பத்தமனென்று சொன்னார்களி
வற்றின்முற்சொன்ன பாம்பு
மூத்திடுமாணுதம் பின்னுக மொழிந்தவிட வரவங்கு
ழைந்தபெண்ணாம்

இரையெடுக்குநாள்.

ஆதித்தவாரமனந்தன் வாசுகி அடுத்த திங்கட்கிழமை
க்கிரையெடுக்கும்

போற்றுசெவ்வாய் தட்சகன் கார்க்கோடன் புதன்
கிழமையிலிரை யுவந்தெடுக்கும்
விடங்கொண்ட துளையெயிற்றுப் பத்மன் வியாழக்கி
ழமைதனி லிரையெடுக்கும்
படர்ந்துசென் றிரைதேடி மாபத்மன் பார்க்கவன்வா
ரத்தில் பரிந்தெடுக்கும்
கூறுஞ்சனிக்கிழமை பகல் சங்கபாலன் குளிகனிரவி
லிரைகுறித்தெடுக்கும்

உணவு

பூர்வமறிந்தபார்ப்பார் வாயும் பூடணம் இரண்டையும்
புசித்திருப்பார்
அரசராகுகங்கிழலகும் வண்டுமெடுத் தருந்திமரந்தனி
ற்சென்றிருந்திடுவார்
இரைதேடச்சென்று வணிகர் ஓய்ந்திடும் எலியுமருந்தி
ப்பசிகலிவகல்வார்
சூத்திரர் மீன் தவளை தண்ணீர்த் துறைதனிற்சென்று
ருந்துமுறையிதுவே

இருக்குமிடம்

சாஸ்திரஞ் சொன்னபடியே நாலுவகைச் சாதியிருக்
குமிடந்தனைக்கேளாய்
வேதியர்கோயிலிலே மாமன்னர் வீட்டில் வணிகர்புற்
றில்நாட்டுசூத்திரர்

நீதியாய் வாய்ந்திருப்பார் நால்வரும் நின்றாடுங்குறித
னைநிகழ்த்துகிறேன்

ஆடுங்குறி

அண்ணாந்துபார்த்தாடுவார் வேதியர் அரசர்களெதி
பார்த்தாடிநிற்பார்

கண்ணாலெண்டிசைதனையே வணிகர்கள் நண்ணாடு
வார்யாருங்கொண்டாடவே

மண்ணாரும் பூமிமதனையே சூத்திரர் மகிழ்வுடனே பார்த்
தாடிநிர்பார்

இப்பால்லா வரவின்படத்தில் இருக்கின்ற பொறியினை
ச்சொல்லுகிறேன் நெறியுடனே

முத்திரை

பார்ப்பார்படத்திற்சங்கு டன்னவர்படத்தினிற் சக்க
ரம்பதிந்திருக்கும்

சாய்பானவில்லுவணிகர் படத்தினில் கனத்தசூத்திர
ர்க்குப்புள்ளடியென்றார்

நிறம்.

புஷ்பராகந்தநிறமாம் புரவலர் பொன்னிறமாம் வணிகர்
வெண்ணிறமாம்

மாகிலாச்சூத்திரர்நிறம் திருஷ்டியின் மைந்நிறமாயி
துமேய் யாகுமே

வாசனை

அந்தணர் நாவிமணம் இறையவர் அலர்ந்தசெந்தா
மரையினலர்மணமாம்
வந்திடும்வசிகர்மணம் பாதிரிப்பூ வருத்தசூத்திரர்ம
ணமிலுப்பையின்பூ

கருப்பமுதலியவைகள்.

சாதியிந்தநாலுவகையில் ஆணும் பெண்ணும் தழுவி
ப்புணர்ந்துகர்ப்பதரித்தபின்னர்
நீதியாய்முட்டையிட்டுப் பொரித்திடும் நேர்மையை
ச்சொல்லுகிறேன் நீகேளாய்
காற்றுறுமாடிமாதம் ஒன்றோடொன்று கலந்துவப்
ற்றிலேகருத்தரிக்கும்
தோற்றியகார்த்திகையில் கருமுற்றிச் சூலுளைத்தினு
மென்பதேலமெழுநாள்
இருநூற்றுநாற்பத்தெட்டு முட்டைகளிட்டிருநூற்
றிருபத்தெட்டோரேழுநாளில்
பருகிடும்நாலுமுட்டை அழிந்துபோம் பதினாறுமுட்
டைநல்லபக்குவத்திலே
ஒருமிக்க இருபத்தேழாம் நாளினில் உச்சிதமாகப்
பொரித்தூர்ந்துதிரியும்
நாலாறுகாலுமுண்டாம் தோன்றுய நாலேழுநாளினி
ல்நஞ்சுவேண்டி

பேலேறுமாதித்தனைப் பார்த்தாடும் விளங்குமேல்வா
ய்ப்பல்லுநாலினுமே
கொடுவிஷம்வந்துதிக்கும் பற்சாக்கும் கூறுலூற்றிடு
மாறுமலே.

பற்களின்பெயர் முதலியவை.

கடுவமருள்நாவெதயிற்றுக்கும் பெயர்சொல்வேன் கா
ளிகளாஸ்திரியமன்யமதூதனும்
மேல்வாயலகுதனில் அரவுக்கு விளக்கமாய்நாலுபல்
லுமுளைத்திருக்கும்
நாலுபற்குதுளையிருக்கும் கடித்திடில் நச்சுபற்றுளை
வழியாய்நஞ்சுகழன்று
வந்துகடிவாயிலிறங்கித் தொண்ணூற்றெட்டு மாத்
திரையினின்றுடலில்மண்டியேறும்
அந்தமுள்ளபடத்தரகந் தோன்றிய நாளறுபதில்
தோலுரிக்குமறுமதியில்
குதித்திடும்விஷமெயிற்றில் இவ்விரண்டுங் கொண்ட
வாளரவிங்குக்கண்டமென்பார்
கதித்திடுமெய்ப்பிற்றரவப் பலலுத்தைக்குங் கடிவாயி
ன்குறிதனைக்கழறிகிறேன்

கடிவாயின் குறி.

காளியெனும்பல்லுத்தைதத்தவாய் புள்ளடியாம் கடி
வாயிற்பன்னீர்போல்வறிவாம்நீர்

மீளர்தகாளாஸ்திரி நைத்தவாய் விளங்குமுக்கோண
ம்செந்நீர்க்கசியும்
கேந்தராயநமனெனும்பல் தைத்தவாய் கூர்முட்டே
நிகரும்செந்நீர்பொசியும்
[illegible]தனென்றபல்லுத்தைத்தால் விற்போலாங் கூவி
கழுநீர்போலவுடிவாகும்

கடித்தல்முதலியன,

பசியுற்றால்பயந்தால்நொந்தால் கோபித்தால் பல்லி
ன்விஷமிகுந்தால்காலால்மிதித்தால்
இசையுறுமேனளர்முனிவர் காலனிவர் ஏவலினல்[illegible]
தாவலினல்
செய்தனன்றிகொன்றபேரைப் பூர்வசென்மப் பகை
யாளரைவன்மமுள்ளோரைப்
பைரவம்வர்துகடிக்கும் கடித்தொரு பற்பட்டீரில்
விஷந்தலைப்பற்றியேறும்
பல்லிரண்டுபட்டால்விஷம் மாமிசத்தைப் பற்றி[illegible]
ம்மூன்றுபற்பட்டால்விஷம்
[illegible]லுமெலும்பைப்பற்றியேறும் நாலுபல் வகிர்ந்திருந்தால்
மூளைப்புகுந்தேறும்விஷம்
காற்கடியொருபற்பட்டால் இருபல்லாம் கடித்திருந்தால்
அஃதரைக்கடியாகும்
முக்கால்கடியிருமூன்றுபட்டால் அந்தக்கடி முக்கா[illegible]
யென்றனர்மிக்கபெரியோர்

முளைத்தபல்நான்கும்பட்டால் அந்தக்கடி முழுக்கடி
யாமென்றுவகுத்தனரே

துளைப்பல்லிலொருபற்பட்டால் அந்தக்கடி தொடங்
கித்தியானிக்கவிடந்தீரும்

இரண்டுபற்பட்டவிஷத்தை மணிபதித் தேற்குங்கரு
த்தினால்தீர்க்கலாமே

மூணைமிகுமூன்றுபல்தைத்தால் அந்தக்கடி மூலிகைவி
க்கநசிகத்தால்தீரும்

ஆவின்பல்நாலும்பட்டால் மணிமந்திரம் ஔஷதந்
தெய்வச்செயலால்தீரும்

தரைவினிலரவம்வந்து கடித்திட்டால் மீளாதகுறியி
டம்விளம்புகிறேன்

கடித்தால் மீளாத உறுப்பு முதலியன.

உள்ளங்கால் உள்ளங்கை நெற்றி மார்பு கழுத்து [illegible]
முலை மூக்குப்புருவந்தொப்புள்

தென்வியநற்சந்து திக்காய் இருசெவி தோடி ஆலம
ரத்தடியில்

புன்னைபுளிமூங்கிலரசில் நாணலில் புற்றிற்கிணற்றி
லேறிப்புதுமடையில்

வின்னமுள்ளபாருங்கோயிலில் பாய்வீட்டில் வி[illegible]
விடத்திற்பிணைஞ்சுமிடத்தில்

நந்தவனம்போதுமடத்தில் ஏரிக்கரை, நதிக்கரைக
ளைக்கரையாகசாலை
அத்திசந்திமுக்சந்தியில் உறக்கத்தில் ஐயன்பிடாரிது
ர்க்கைஆலயத்திலும்

மீளாதநாள் முதலியவை.

மாயாவரிப்பாபுகடித்தால் தீராது ரமணநாளுசிசொ
ல்விற்பரணமகம்
ஆயிலையந்திருவோணம் மூலந்திரு வாதிரைகார்த்தி
கைமுறஞ்சோதிசித்திரை
சென்மநாள்சென்மமுன்னாள் அனுசென்மம் சேர்த்தி
டுநாளும்மாவாசை.
வன்மைமிருகநவமிசஷ்டி குளிகனில் வந்துகடிக்கிலது
முந்திகொல்லும்

தானுடிக்கடித்தரவம.ஆடினும் தாழப்புரளினுங்கடி
த்தந்தவிடத்தே
தானேடிகிடந்திடினும் அந்தக்கடி தப்பாமற்சொல்
லுமென்றுசெப்பலாமே
கடித்தவாய்தடிக்கிற்கொல்லும் வீங்கிகடுத் தேதினு
ஞ்கொல்லுங்கண்டஞ்சோரினுங்கொல்லும்
குடித்தமநந்தி தடிக்கிற்கொல்லும் கடிவாயித் குழுமீ
யேசெங்குருதிபாயினுங்கொல்லும்

விடங்குதித்தொழுகிற் கொல்லும் நாவறண்டு விழிசி
வந்தால்நடுக்கமேவினால் கொல்லும்

படங்கொண்டபொறியரவின் நாலுபல்லும் பதியப்ப
டினுங்கொல்லும் பற்கடித்தவை

சுறுத்திடிற் கொல்லுமூரகம் சீறிய கடித்திடவுடன்
மலநீர்விடுத்தாற்கொல்லும்

விறைத்துடல்கைகால்விரல் நிமிர்ந்திருவிழி சொருகி
னுங்கொல்லுமேற்செயல் சொல்வேன்

நச்சரவிலாண் கடித்தால் மேல்நோக்கும் நயனம்பெ
ண்பாம்பினிற் கீழ்போக்கும்

அச்சமில்லாமலடாகில் வேர்வைமிகும் அலிப்பாம்பெ
னில்விஷங்களிப்பாமே

சூலாகில் வயிறுளையும் முட்டையிட்ட துட்டையெனி
ல்ரெட்டைவிழி முற்றச்சிவப்பாம்

வேலெயிற்றுக்காளை கடித்தால் வலதுகண் வேதனை
செய்யுமகிழ்ச்சாதிக்கடித்தால்

கடித்தவாய் வீக்கங்காணும் இளமைசேர் கன்னியர
வுக்கிடதுகண் துயர்செய்யும்

துடித்திடுங்குட்டிப்பாம்பு கடித்திடில் சோர்வுமயக்க
முடன்பாரில்வீழ்த்தும்

கருநாகங்கடித்ததென்றால் உடனிரு காதும்செவிடா
குமென்றோதினரே

ஒருரோகத்தடையிதுவே பலவிஷத்தூரங்கள் சரித்
திரமுறைசெய்கிறேன்

விரியன் முதலியவைகளின் பிறப்பு
முதலானவைகள்.

விரியனிலாறுபேதம் கத்திரி விரியன் பெருவிரியன் ரத்
விரியன்
பரிவிசெய்குருவிரியன் புல்விரியன் பன்னுஞ்சலவிரியன்
என்னுமிவற்றுள்
மூதட்டுக் கத்திரிவிரியன் சூல்கொண்டு முதுகுவெடி
த்துக்குஞ்சது பொரித்தால்
காட்டோந்தி தேன்புரம் நண்டு தெறுக்கேகளுடனெசி
லந்திபுலிமுகப்பூச்சி
செய்யானது பொறிவண்டு முதற்பல சிலசெந்துக்கள்
இல்சென்மிக்குமே
பெய்யான்பெருவிரியன் கடித்திடில் வீங்கிகடுத்தெ
ரிந்து வீறுங்குருதி
வடிந்திடுங்கடிவாயில் கண்ணுறங்கி மயங்கியுடல்வெ
தும்பித்திபங்கிடுமே
கடித்திடுமாத்தவிரியன் பற்பட்டக் கடித்திடில்வாயின்
வருகாணுங்குருதி
காற்றடிக்கிலுடன்வீங்கிக் கடுத்திடக் கலந்தூவாயிற்
றுவ்விபிறந்து கொல்லும்

[illegible]ற்றுமிகுமூவிரியன் கடித்திடில் வலித்துக்கடுத்தெ
ரிந்துவீசுங்கடிவாய்

வழலைக்குதவாதவழுக்கும் கடிவாயில வடியுரத்தங்கரு
வழலையெனில்

அழலெனவெனிவெதும்பி வேர்வைமிகுந் தங்கேயின்
காலுஞ்சிவக்குகண்களினர்

[illegible]பினை யடைத்துக்கொல்லும் இரத்த மண்டலிய
னில்மயிர்க்கால்வழியில்

[illegible]விட்டொழுகுங்குருதி சீதளந் தருமண்ணைக்கு
டல்தான்குளிர்ந்து

தழுவிடும்வெயர்வையெனுநீர் மூக்கனுக் குராமுதுருக
டிதடமுகநொந்து

பழுப்பவாயுங் கழுத்தும் இழுத்திட்டும் படருங்குரு
ஓமருபிந்திடலதிரும்

சுற்றுமபக்கமாவாசல இருகண்ணுஞ் சுழன்றடிக்க
டிழ்இமயங்கிடுமே

பற்றுமுறுக்கரவாகல் உடல்முற்றும் பதறித்திருகுமு
றுக்கிடும்பூரம்

நீன்றார்ந்துகாரகரக்கு தேளுக்கு நெறிகட்டிக்கடுத்தெ
ரிந்திடும்வெயர்க்கும்

[illegible]ர்ந்த நண்டுத்தெறுக்கால் கடித்திடில் எரித்துக்
கடுத்துத்தமிறிடும்வீங்கும்

செய்யான்பற்பட்டகடிவாய் வீங்கியே தேளிற்குமட
ங்கோர்தாளுக்கடுக்கும்
பொய்யாசிசெஞ்சோர்வுகடித்தால் உடல்முச்றும் புள்
ளிபோலெங்குந் தடித்துத்தெள்ளுசிவப்பாம்
கறுத்திடுஞ் சோருவுக்குத் தேக முற்றுர்கறுத்தடிப்
படர்ந்திடுந்திமிர்க்கும்
ஒருத்திகிஞ் சிலந்தியெனில் கடிவாயில் ஒருபொழுதி
ருபொழுதெரிந்தழலும்
வண்டுக்கழியுடல்முழுதுஞ் சிலநாளில் வட்டமிட்டுத்
தடித்திட்டுப்படர்ந்தரிக்கும்
தண்டுநேர்செவ்வட்டைக்கடித்தால் கடித்தவாய் தடி
த்துச்சிவப்பேறித் திமிர்ந்திருக்கும்
இன்னமொருகோடியுண்டாம் அவையெல்லாம் எடுத்
தறிந்தோதுதற்கெவர்தரமாம்

வயது.

பன்னகங் கள்வயதினையும் செகுத்திடும் பகைவர்பிரி
வினையும்பகருகிறேன்
பார்பாருக் காயிரத்தெட்டு பாராளும் பார்த்திபற்
கெண்ணூருமாத்திரமாம்
வார்த்தைநயவைசியருக்கு அந்நூறு வருத்ததற்கு
முன்னூறுவயதாம்

பகை.

இருந்தலைமனியன்செந்நாய் மயிலன்னம் எகுதிகுளம்
புமின்னவிடிகிரி
கருமயிர்க்காடிபன்றி செம்போத்துக் கருடன்முதலை
யாந்தைநகாக்கைகூகை
செயலுள்ளமாறிவெள்ளம் மதுமுதற் செப்பியசத்து
ருவுக்குத்தப்பிப்பிழைத்தால்
வயதொகுநூற்றிருபது சாகாமல் மண்மிசைவாழ்ந்
திருக்கும்உண்மையிதுவே
மண்மீதில்நூற்றிருபது பருவமும் வாழ்ந்தபிறகுடலை
ந்தேய்ந்துருகி
ஒண்மணிபடஞ்சிறகாய்ப் பறக்குமப்போ துயர்ந்தசி
கையின்மணியொன்றுதோற்றும்
தோற்றிய அந்தநாகப் புவிவிட்டுத் தொடரும்வனத்
தினும்விண்ணடர்வெற்பினும்
போற்றியேபணிகோடி சூழவே புரவலன்போலிருந்த
ரசுசெய்யும்
மானுக்மென்றுபோராம் கருடற்கு மாத்திரம்பயப்படு
மநேத்தியதாய்த்
தானுன்குபல்லின்விஷம் இருகண்ணில் தரித்திடும்
பார்த்தவுடனெரித்திடுமே
பாம்பின்ராசாளியென்றும் புகலுவர் பருவமவையொ
ருநூற்றிருபதறத்

தாய்பெற்றவாயுள்முழுதும் இருந்துபின் சாலோகப
தத்திற்குமேலாமென்பார்

தூதன்வரவுவடிவுமுதலியன,

தூதன்வரவும்வடிவும் அவன்வாயாற் சொல்லுங்குறி
தொடுங்குறிபல்லின்குறியும்
நீதியுடன்சொல்குவேன் சாகுகால நிலையிற்பதறிவ
ந்துநின்றுசொல்லினும்
செய்யபூச்சூடிவரினும் கருந்துகில் செம்மதுகிலைப்பு
னைந்துபைபவரினும்
கைநீற்றபூன்றிவலனும் கேடகம் கத்திகையிற்பிடி
த்துத்தத்திவரினும்
கண்ணில்நீர்வாரநிற்கினும் வாங்குழறிக் கைநெய்விரி
த்துநின்றுமெய்யுரைக்கினும்
விண்ணோக்கிப்பாரத்துநிற்கினும் தூணிலும் விற்கிலு
ஞ்சார்ந்திருந்துமெய்மைசொல்லிறும்
மண்ணிலெனக்கால்கொண்டுகீறினும் தலையிற்கைதவைத்
துவரினும்முண்டைசுற்றிவரிலும்
எண்ணெதலைக்கிட்டுவரினும் பாரில்வீழ்ந் தேங்கியபுல
ம்பியழுதேதாங்கிநிற்கினும்
பாம்பின்பேர்முன்புசொல்லினும் பாம்பின்யல் பட்ட
வன்பேர்முன்புசொல்லிகெட்டுயிர்க்கினும்

சேசிரிப்புடன்கொட்டாவிடினும் மார்புசந்து சொறி
யினுந்தன்மயிரைதூற்றிநிற்கினும்

வக்குப்பிரிடத்தில்நிற்கினும் நோயாளி வரினும்மொட்
டைத்தலையன்வந்துநிற்கினும்

அந்தகனைகைகாதறிபட்டோன் மூக்குக் காதறுபட்
டோன்ஒற்றைவிழிமறைபட்டோன்

இங்கிவர்கள்வந்துசொல்லினும் பூனக்கண்ணன் இய
ம்பினுங்கச்செயலிதுவே

பாங்குடன் தூதன்வந்த ஆரூடம் பதினாறுதிசைக்கு
நான்பகருருமேறன்

திக்காரூடமுதலியன.

அருக்கினில்நல்லபாம்பு தேள்வமழலை அலகீர்ம்பாம்ப
ரணைஎவிமண்டலி

இருக்குநற்சாரைபாம்பு மாநாகன் எறும்புமயக்கரா
வண்டிகன்றைசெய்யான்

பூரம்வீரியன்இலந்திசனும்படி பூர்வதிசை யாதிபுதினா
றுவகைக்கு

ஆரூடமதுவாகும் தூதரிலே அறிந்தின்னசெந்துவெ
ன்றுதெரிந்துகொள்வாய்

மூன்னீமவந்துநின்றதூதன் மூக்கையும் முகத்தையும்
தொடில்நற்பன்னகமென்னலாம்

பன்னுமரந்தன்னைத்தொட்டிடில் வழலை பருத்தவிரி
யனுகுப்உரத்தைத்தொட்டால்
சந்திரகிலம்மண்டலியாம் இருமுழந் தானும்புனடியன்
தன்கீழ்க்கிலந்தி.
வந்திந்தரன்யமன்வருணன் தனதனனும் வாழுந்திசை
யிற்சொன்னால்மண்ணுமாண்பால்
ஈசன்கேநிருதிதிக்கில் சொல்லிடில் ஏந்திழைபாரை
யென்றேதேர்ந்துரைத்தார்
வாச்மிகுகாற்றுத்திசையில் இயம்பிடில் வனத்தமிரு
கங்களினினத்தையென்றார்
கீட்டிசைவருதூதன் அகரமுன் கிளத்திலொருபல்
யமன்திசைக்கிரண்டாம்
விட்டபில்மேற்றிசையில் மூன்றுபல் வடதிசைநாலு
பலவகிர்த்ததென்பார்
தென்திசைவருதூதன் இகரமுன் செப்பிலொருபல
மேற்றிசைக்கிரண்டாம்
மூன்றுதவடதிசையில் மூன்றுபல் குணத்திசைநாலு
பல்லென்றுணர்தலாம்
மேற்றிசைதருதூதன் உகரமுன் விளம்பிலொருபல்
வடக்கிரண்டுபல்லாம்
தோற்றுக்கீழ்த்திசைமூன்றும் தென்திசையிற் செப்
பிடலாமிருபல்லென்றே

வடதிசைவருதூதன் எகரமுன் வருத்திலொருபல்கி
ழக்கிண்டுபல்லாம்

திடமிகும் யமன்திசையில் மூன்றுபல் தேககும்வரு
ணத்திசை நான்குபல்லாம்

எண்டிசைவருதூதன் ஓநரமுன் இயம்பிடிலொருபல்
லுமில்லையென்னலாம்

பண்டை வெள்ளையாடைபுனைந்து வந்தொருவன்பத
ருமல்நின்றவிடஞ்சிதறிற்றென்றால்

தூதன்சொன்ன சொல்லதனை எழுத்தெண்ணிற் சூழ்
ந்தொருமூன்றினிலீந்தசேடம்

ஒன்றென்றேல் சாதல்திண்ணம் இரண்டெனில் உயர்ந்
தவிஷந்தலை கொண்டுடன்மீளும்

சரியாயிருந்ததென்றால் விஷமில்லை சாக்குறியிலக்கண
துரைக்கிறேன்கேள்

சாக்குறிமுதலியன.

சொரிதருபூரணத்தில் வந்தொருவன் சூனியதிசையி
னிற்போனென்றால்

பற்பட்டோன் பட்டானென்பார் சூனியப்பல் வந்து
பூரணத்தில்தங்கினானென்றால்

மூற்பட்டாலும் விஷத்தால் மெய்ம்மயங்கி மூர்ச்சித்
துக்கிடந்தாலுந் தீர்க்காயுளாம்

இடக்கரத்துரீங்காரத்தை கண்ணினால் எழுதிப்பூரத்
திடநிறம் வெளுக்கிலொன்று

வடித்த பொன்னிறமாகில் இரண்டுபல் வண்ணஞ்சிவ
க்கில்மூன்று பலமென்னலாம்

கறுத்திடில் நாலுபல்லாம் மூகந்திடில் கடிமலர்த்தா
ழைவாசனைகாணில்

மறித்ததுநல்லபாம்பு பாதிரிபூ மணக்கில்வழலைபுளி
மணக்கில்விரியன்

மல்லிகைப்பூ மண்டலியாம் மிளகுசுக்கு மணத்திடில்
சிறுபாம்பென்றுணர்த்திடலாம்

சொல்லிய கற்பனம்பழத்தின் வாசனை தொடங்கிடி
வில்லையொருவிடந்தாலும்

முற்பக்கத்திரவினிலே புருடரைச் சார்ப்பந்தொடர்ந்
துவலக்தானிற்கடிக்கும்

பிற்புறமடவியரை அரவிடப் புரத்தினிலேகடித்
தொறுத்திடுமே

நற்பிவாடவரை இடத்தினில் தாரியரைவலத்தில்
கசடிக்கடிக்கும்

பிற்பக்கத்திரவாணை இடத்தினில் பெண்ணைவலப்பு
றம்கண்ணும்பகலில்

கடித்திடும் ஆணைவலத்தில் பெண்களைக் கடிக்குமிடப்
புறத்தில்மடிப்பாக

வேகக்குறி.

பிடித்திடும்வேகக்குறி தனைச்சொல்வேன் பெலத்தெ
ழுவேகமூவகைப்படுமே

வாரிவின்வேகமட்டுக் குளிர்தரு வருணன்வேகந்தச
வமையாகும்

தேயுவின்வேகம்பத்து மாத்திரைதெரியின்மூவெ
ன்பதுவருணனுக்கா

காற்றினுக்கைப்பதாகும் தேயுவுக்குக் காட்டியமாத்
திரை தொண்ணூற்றெட்டாம்

சாற்றியவாரிவின்முதல் வேகம்வந்து சார்வுறில்மூர்
ச்சித்துவேர்வரும்பும்

இரண்டுக்கு வெதுப்பமுண்டாம் மூன்றிற்கண்ணீடுச்
சொருகுநான்கிலெடுக்குஞ்சத்தி

திரண்டைந்திற் கோழையடைக்கும் ஆறிறனில் சிறக்
குமறிவற்றியும்விறைத்திடுமேழ்

எட்டாகிலுயில்போக்கும் வருணனில் இயலுமாதிவே
கம்மயிர்க்கடிச்சாய்

வெட்டுடல் முற்றச்சிறசிவுப்பம் இரண்டுக்கு தேயவு
டல்கரிந்துவாயுமுலர்ந்து

வெதுப்பிடு மூன்றுநில் உள்மயக்கும் வினங்கியநான்
கெனிலுனங்கக்கித்

ததும்பிடுங் காமிருக்கும் ஐந்தினில் தலையைபடுக்கும்
நெஞ்சறிவழிக்கும்
ஆறுகிற் கண்விழித்து மேல்பார்க்கும் அடுத்திடுந
எழினில்அங்கம் விறைக்கும்
கூறுன இருநான்கில் அடக்கமாம் குறித்திடுஞ்சுக்கில்
மொன்பதுக்ககன்பார்
பத்தாகில்மரணமாதம் அங்கியின் பகர்தருமுதல்வே
கம்பார்வைசிந்து
சத்தன முகங்கருக்கும் இரண்டினில் தடித்திட்டுச்சி
ஸ்ரீருங்கடித்திறங்கி
மூகம் வெளுத்துடல் மூழுகும் ரோமபுல் முளைத்த
தெனத்தழைத்துக்கிளைக்குநிற்கும்
சேகமதில்முன்றாகில் வாய்குதிறிச் சிந்தைகலங்கிபுடல்
நொந்துவிழும்
நாவிதிற்குடவிரைந்து சோகமாய் நாசியினீர் வடிந்து
தேகமாறும்
மேலெழுமைந்தில்விழி உடல்முற்றும் வெடுவெடுத்
தாட்டமுற்றிமாறில்
பல்லுக் கடிப்பண்டாகு விறைந்துடல் பதைக்கும்
மூக்கிரண்டினில் குதிக்கும் புனல்
சொல்லுரைகெடுமேழில் எட்டினில் சுவாசமெழும்வி
ழிமேல்துன்னிநோக்கும்

ஒன்பதிலொடுன்ரூமுயிர் பத்தினில் உடல்விட்டுப்புறந்
திடும்வுயிர்வானில்

என்புள்ளதேகமதில் அடக்கமாய் இருக்குமுயிர் நிலை
யையியம்புகுறேன்

அட்க்சக்குறி.

விடத்தகும் அடக்கமதில் இருவிரு மேல்நோக்கில்உயி
ரதுமேலாகுமே

மடக்கியேவிழிகீழாய் விழித்திடில் வாழ்வருமுயிரது
கீழாகும்

பக்கத்தில்விழிபொதிங்கில் சீவனும் பக்கத்திருக்கு
மென்றார்தக்கபெரியோர்

சக்கெதிர்விழித்திருக்கில் சீவனும் சடத்தினில் இல்லை
யென்றுதிடத்திற்சொல்வாய்

ஒடுங்கிநெஞ்சடமதனைப் பிரம்புகொண் டோக்கியடக்
கிதுடன் வீங்கிடினும்

சந்தழலென வெதும்பிச் சிவக்கினும் தண்ணீர்ப்
பொட்டிடில்தானுலரினும்

குடத்தினீர்மேற்சொறியில் உடல்முற்றும் குளிர்ந்து
மயிர்பொடித்து வளைந்திடினும்

பிடித்தகைவிரலில்கெட்டி பறியினும் பெலத்திழுத்திட
மயிர்வலித்தறினும்

ஊன்றும்குடோரியிடில் செவ்விரத்தம் ஒழுகில்நிவாரி
லொன்றுநடக்கில்
தோன்றிடும்ஆவியுள்ளே அடக்கமாம்சூட்சியீதுவைய
தன்மாட்சியறியே

விருத்தம்.

அடக்கமென்றறிந்தபோதே
யவர்தலையுச்சிசீத்திக்
குடத்தின்வாயோடழுத்திக்
கொடும்புகையடைந்தபின்னர்
வெடித்திடும்வேளைசாற்றை
விட்டுமேலோடவைத்துக்
கடுக்கெனமலரிக்கமீண்டு
கடிவிடங்கடிவாய்காணும்

சிந்து.

சிரசிக்குடோரியிட்டு வேளையின் செழுஞ்சாற்றிற்கு
தமொருகழஞ்சிவிட்டு
விரிவாயோட்டைவைத்து அதன்மீது வெய்யகரிக்க
னவிட்டுப்பையவெரிக்கில்
அடங்கிக்கிடந்தவுயிர் தோன்றிடும் அனைவர்க்கும்
அதிசயநினைவுறவே
விடுங்கொளரவக்கடித்தே அடங்கிய மிக்ககடுவை
மூன்றேமுக்காற்குள்ளே

காலுீன்யோட்டுத்தூரத்தக் கந்திரங் கற்றுணர்ந்தோ
ர்கள்சொன்னபெற்றிபிதாவே

மேலான தந்திரந்தான் இன்னமொன்று விஸ்தாரமா
கச்சொல்லுவேன் தந்தைமொழியே

கேளாய்நீ ஆடதற்கு நாளமது விட்டுமாறுவிரல்கீழ்ந்
திட்டூடனே

வாளார்கண்மங்கையர்க்கு நாளமது வளமிகுளட்டுக்
குலநீளம்

செப்பினிற்றகட்டித்து வளர்கின்ற செங்கெற்றுஷின்
பருமன்னென்று

ஒப்பென்றுசிறுவிரலாம் இரண்டையும் ஊமத்தைத்
பூப்போலுருப்படுத்தி

அடக்கந்தனையறிந்து ஆடவர்க் காறுவிரலுடையநா
ளமதை

இட்டூடன்கோசமதிற் செலுத்திமேய தீதிலரைத்தகஞ்
ஞ்சிசூதம்விட்டி

நாளதின்மேற்புறத்தில் கரியுடன் நல்லகனலிவிட்டு
மெல்லவைரிக்க

வேளையறைநாழிகைக்குள் சூதந்தான் விரைவாயுள்
புகுந்துமருவியபின்

பணிந்தழாவமது கடித்திட்டுப் பறந்துபிராணன்வி
ண்ணிலமறைந்திடமெய்

பிணமாய்க்கிடந்திடினும் உயிர்வந்து பிறக்கிடுமேயிது
திறம்பெறவே
பெண்கட்குமிப்படியே செய்திடிற் பிழைப்பாரல்லா
மலுயிரிழப்பாரோ
பின்புறுந்தயிலமொன்று புவியினில் பட்டபிணமதனை
த்தொட்டெழுப்பச்
செய்யும்வகைகேடாய் ஒருபடி செங்குன்றிமணித்
தோலங்ககற்றித்
துப்பபரூப்பெடித்துக்கொண்டே எரிக்சிலே சொல்
லத்தகுவிதியிளிலேச்சாற்கூற
சரியாகக்கலந்ததிலே பத்துநாள் தரித்திருந்தூரவை
த்தெடுத்துக்கொண்டே
அரிதேர்கொடிவேலி வேர்ப்பட்டை அறைத்ததிற்
கொம்மட்டிக்காயளவதனை
கொன்றுக்கலந்துகஞ்சிப் பாத்திரந் தொருபுரத்தம்
கிரவியொளிமிளவைக்க
நன்றும்விழுந்தைலம் அதிற்பாதி நண்ணுமிடதிவா
லூரூநவைபின்னரிசிமாத்
தயிலந்தனுற்சேர்த்துக் கொண்டிதில் தடுப்பரும்கள்
கழஞ்செடுத்துரசம்
இவ்லாவொருகழஞ்ச கேந்தகம் இனியவொருவரா
கனிடைநிறுத்துக்

கூட்டிநன்றாயறைத்துக் பழஞ்சொன்று குருக்கோ
ண்டுவிளைவேலிப்பருத்திப்பஞ்சில்
ஊட்டியேயுலர்த்திக்கொண்டு நாளத்தை ஒளிபெரு
கோசத்தினுட்செலுத்தி:
இருப்புத்சலாகையினால் பஞ்சினை எடுத்தந்தநாளத்
திடைக்கியிட்டு
நெருப்பினைமேவிட்டுக் கொளுத்திட நேயவுயிரும்வ
ருங்காயத்திலே
சுடர்பெருகெந்தகமும் காயமும் சூதமும் எருக்கன்
பால்சொரிந்தரைத்தே
அடைவுடன்வெண்டுகிலில் தடவியே யவித்திரியாக்
கியேபயனற்கொளுத்தி
புடையைகற்கோசந்தன்னில் நன்றாகப் புகட்டி சிவன்
வந்துபுகுந்திடுமே
வகையாய்க்குடோரிதனை முன்னவர் வகுத்ததைவிரி
க்காமல்தொகுத்தேனே

விருத்தம்.

நச்சரவாதியாக
நண்ணுஞ்சிற்றெறும்பீறாக
இச்சகத்தவரைத்தீண்டி
பெரியவிஷற்றலைமேற்கொண்டான்

வைச்சமந்திரத்தினாலு
மருந்தினுந் தீராவிட்டால்
உச்சிதமாகத்தீர்க்கு
மூவனத்தியானஞ் சொல்வேன்

கருடத்தியாம்-சிந்து

வேதியர்க்கனுகூலன் காசியர் வினதை பயந்தெடுத்த
கனயோகன்
சதுர்யுபட்சிராஜன் அருணற்குத் தம்பியெனவிதித்த
கெம்பீரன்
அஷ்டமாநாகங்களைப் பாதாள மளவுதுரத்தியெற்
றியதுபுனைந்தோன்
துஷ்டனும்இந்திரஜித்து விட்டநாகங்க கட்டுவிட்டுத்
துட்டழியவிடபெரியோன்
பலத்தினில்சவுரியத்தில் ஒப்பிலாப் பக்ஷராஜாகிப்பணி
ந்தசிங்கவேறன்னான்
குலத்தினிற்பிரமகுலன் கீழ்க்கடல் குடகடல்தென்க
டல்வடகடலும்
கொடியினிற்சுற்றிவருவோன் பாற்கடல் நடுவினிற்
பள்ளிகொள்ளுநாரணர்க்கும்
நொடியும்ஊர்த்தியுமானோன் முன்னாளிற் சோதியாக்
கிர்களைத்தேடிநகந்தோன்
கதியிற்சூரியகதியும மனத்தி காற்றின்கதியுமிகப்போ
தியிசெய்பவன்.

திசைத்திருமசுரர்களும் அதிதிதன் சிறுவரும்பாற்கடலினு
றையமிர்தம்

கடைந்திடமந்தரத்தை வேரோடும் பிடுங்கிமத்தாக
நட்பெருமையினான்

மடந்தைதகத்துருவினிடந் தாய்கொண்டு போற்றிடவே
ண்டுமென்றுமனந்துணிந்து

பறந்துவிண்ணுலகிற்சென்று இந்திரன் பதியினிற்கரு
ஞூஷமதிற்கதவை

திறந்துகொண்டுட்புகுந்து காவல்செய் தேவகணங்க
ளையுஞ்சிதறவெருட்டிப்

பொற்குடம்நிறைந்திருக்கும் அமிர்தத்தை கெப்பு
டனேயெடுத்து வெளியில் வைத்து

மற்கெதிற் புருகூதன் என்பவன் யப்பவரும்முப்பத்தி
மூன்றுகோடி

தேவர்க்கின்னருடன் கந்திருவர் சித்தரியக்கவார
ர்ஹுற்றவரைத்

தாவினெடுமுக்கினாலும் சிறகாலும்தடக்கையினாலுமிகு
தரீளினாலும்

மலைந்தவர்வெருண்டோட வென்றுநல வனைபுனைந்து
மனத்தோகையுடன்

தலந்தனிற்சிறுதாயாம் கத்துருமுன் தங்கக்குடத்த
மிர்தமங்குவைத்து
சபதத்தையறத தீர்த்தசுத்தவீரன் தானிந்திரற்கிளைய
னானபுண்ணியன்
செயதநியமம்பெற்றோன் கருடன் சிறகிரண்டும் பச்சை
நிறமாக
விழிசிவப்பாகமேனி முற்றிலும் வெண்ணிறமாகவின்
ணிமண்ணுமென்றாக்
குழுமியேபோம் நிமிர்ந்த உருவமும் குடநிறையமிர்த
மதைக்கரத்தில்வைத்து
பைந்நாகவணை யுடைவோன் கரத்தைந்து படையு
டையோன் கௌத்துவத் தொடையுடையோன்
பொன்னாடைரத்நமகுடம் நுதலினும் சென்னியினுந்
தரித்தோன் திருமுகத்தான் மாத்தான்
மாலோனைப்புயத்தினில்வைத்து விழிகளில்மருவுங்க
ருணைமிகப்பொழிதரவே
மேலானவிண்ணிற்பறந்து திசையெட்டும் விளங்கவே
இருளெனுங்களங்கமற்
வருபவனாக நினைத்தே அன்புடன் மனதிற்றியானஞ்
செய்யவல்லவிஷங்கள்
பரிதியைக் கண்டபனிபோல் கொடியினிற் பறந்திடு
மேவியிர்சிறந்திடுமே

விருத்தம்

துதித்திடும்பணிகளுன்னின்
  றேற்றமுமொடுக்கந்தானும்
விதித்திடுவெவ்வேறான
  சாதியின்விஷங்கடாமும்
பதித்திடும்மெயிற்றலவந்த
  பலனகளுமுரைத்தோமிப்பால்
கதித்திடும்விஷத்திற்கெல்லா
  மருந்தினைக்கழறுவோமே

சிந்து

அத்தர்தென்மருதூர் காரணர் சித்தர்புரமெரித்ததே
  வதேவர்
மத்தமொடுகெடுக்கைதும்பை கங்கைபிறை வைத்தச
  டிலாதிகர்த்தானோர்
கடுவமர்கள கண்டர் மான்மழுக் கரத்தர்திருபுவிவை
  புரிந்துதடுத்தோர்
நவெண்ணையுரத்துறைநத்தோர்: தேடிமுன் நாரணராணர்
  தேடவரியார்
சேடனுக்காகவந்நாள் ஸ்வயம்புத் திருவுருவாகவந்து
  செகதீசர்
வேடனுக்கருள்புரிந்தோர் நாகைய வேதியற்கன்றூர
  சவாதம்புகன்றோர்

தரித்திரந்நீமதிமான் எனும்வேந்தன் தனக்குக்கு
றைவில்கிழிதனையளித்தோர்
இரித்தனுப்படையுடையோர் குளிர்ந்திடு கீரீவரசின்
றெடுத்தகிளிமொழியும்
மலர்கள் தன்மகளும்;;அருந்ததி வன துர்க்கையகலி
யைவருசசியும்
தலமுண் ணுநெடுமாலும் கௌதமன் சதுமுகன்பரிதி
சந்திரன்முருகன்
மாணிபத்திரன்கபிலன் எட்டுத்திக்கு மாநாகம்திசை
பலர்வாழகத்தியர்
சேணிலத்தமரர்களும் முனிவருல் தெரிசித்துப்பூசை
செய்யக்கதிகொடுத்தோர்
மெய்யெனநம்புமடியார் தங்களின் வெய்யவினையகற்
றிவிளங்கவைப்போர்
பொய்யெனநினைந்தவர்பால் ஒருநாளும் புகுதாதவர்
வினைபுகுதாதவர்
கலியுகவரதரென்று மொழிகின்ற காணத்தாசதுரா
ரணத்தார்
மலைமகளினைத்தமது நல்ல வாமத்தில் வைத்துகந்தம
கிமையீனார்
பத்தர்பரிபாலரானோர் நாகலிங்கர் பாதிமலரென்றலை
மீதுவைத்து

தீர்த்தர்கள்கொண்டாடும் நாகமுதம் சிற்றெறும்பிறு
திவாகச்சேர்ந்தவிஷங்கள்

தீர்ந்திடநசிகங்களும் ஒத்திடங்கள் செய்யுமருந்தும்
விஷந்தீண்டினவுடன்

மாற்றிடத்தூள்மருந்து மாத்திரை மையுங்குழம்பாக்
கிராணஞ்செய்யும்மருந்தும்

சோற்றினிற்பாக்கிற்கொடுக்கும் மூலிகை துவளுமூ
றுக்குங்கடிவாய்ப்பூச்சும்

சேர்த்திடும்வெறுப்புகையும் வகையாகச் செப்புகிறே
ன்யாரும்மெய்ப்புறவே

சோதனைவேர்.

சோதனைபங்கம்பாளை வேரினைத் துய்க்சக்கசக்கில்லை
த்தொடர்விஷமே

போதவேயினித்ததென்றால் நல்லபாப்பு புளிக்கில்வ
ழலைத்துவர்த்திடில்விரியன்

காழ்த்திடில்மயக்கரவாம் உவாத்திடில் கனத்தபுடை
யன்பிளகெளில்மண்டலி

நேர்த்தியதாகவேதான் நாக்கினில் நின்றுகடுக்கில்நெ
டுமூக்கினுமே

இப்படியறிந்திடுநீ இசையவே எல்லாவிஷங்களுக்கு
மேசிகம்

செப்பவுங்கேளணங்கே வெற்றிலை சிறியமிளகுக்கறியு
ப்புங்கசக்கி
கண்செவிமூக்கிற்பிழிய உடல்விட்டு விண்புகுந்திட்ட
வுயிர்மீண்டுவருமே
பண்ணிகர்மொழியனமே முருக்கிலை பகருமெருக்கி
னிலைதும்பையிலையும்
பிழிந்திடுநாசிதனில் உடல்விட்டுக் கழிந்தவுயிரும்வந்
துகலந்திடுமே
குளிர்ந்திடுந்துளசியிலை லும்மைசயிலை கொடியமிளகு
கறியுப்புங்கசக்கி
நாசியிற்பிழிந்திடவே உயிர்விட்டுப் பெசிடாதொருந்
திடுபிணமெழுமே
விசியமுதல்வேகம் கண்சிவக்கில் வெள்ளுள்ளிபெரு
மரப்பட்டைவசம்பு
பூராதிப்பட்டைசிறுநீர் விட்டிடித்து பிழிந்திடுமூக்கில்
விஷமொழிந்திடுமே
ஆறுவிரண்டுமூன்று வேகத்திற்கு அழலுமிளகுசுக்
குக்கடுகிந்துப்பு
சாரணைவெற்றிலையும் ஒன்றாகத் தட்டிநசிகம்பண்ண
விட்டோடுமே
காரணமானவேகம் நாலைந்து காலையொராறேழுக்கிடு
நசிகம்

புகலுவனிலுப்பைக்கட்டி தன்னைப் பொடித்துச்சிறு
நீர்விட்டிடமூக்கில்
அகன்றிடுமந்தவேகம் எட்டெனும் அதிவேகம்வந்தெ
ழூந் – மதிமயக்கில்
கொந்தமுனிவசம்பு மிளகுடன் கெடியானதும்பயி
லைதுளசியிலை
தந்திடுமுலைப்பாலு நாசியில் தட்டிநசுஞ்செய்யக்கெட்
டோடுமே
சிறக்கும்பெருமரப்படை தைவேளை சேர்த்துடனெ
ருக்கன்பால்வார்த்தரைத்து
நிறக்குந்துணியிற்றடவி உலர்த்திச்சிறு நீர்விட்டுநாசி
யிலிடப்பார்விட்டோடுமே

புகை

கொடிக்கள்ளிப்பாலதனைத் துகிலினில் குறையாமற்
றோய்த்துலர்த்தி அறையும்வசம்பும்
அத்திடும்பசைச்சப்பாம்பு சுக்கும் ஆனபுளியுமிளகா
யிமுப்பும்
திரித்திடும்துணியில்வைத்து அதனைத் தியிர்கொளுத்
திப்புகைநாசியிவிட்டால்
மரித்திடும்பிணமெனினும் நொடியினில் கருத்துட
னெழுந்திடுங்காலனில்லையே

ஒத்திடம்வேலிப்பருத்தி தைவேளை வருட்டுமுதலியார்
பூனைவணங்கி
மத்தம்வேற்றிலையெருக்கும் பொன்னிறமாய் வறுத்
தொத்தவிஷவெல்லாமாண்டுவிடுமே

துவலை

கிழ்ககாய் நேல்லிதுளகி முருக்கிலை கிளத்துமொடுவே
டக்கியிவைநான்கும்
தாழாமலிடித்துக்கொண்டு பிழிந்தீந்தச் சாற்றினைய
ங்கமெங்குந்தேய்த்திடப்போம்
பேய்ச்சுரைபேய்க்குமட்டி அழிஞ்சிலை பேய்பீர்க்கு
ஞ்சிறுநீர்விட்டிடித்து
தேய்த்திடச்சடமுழுதகம் விஷத்தினல் சேத்தபிணமு
மெழுந்தத்தைமொழியே
முருக்கிடயானைவணங்கி சமூலமும் முன்னமிடித்து
ப்பூசித்துன்னமுருக்க
சுருக்கெனும்விஷங்களெல்லாம் கையெடுத்துத்தொ
ழுதுமுழுதுமகன்றோடிடுமே

தாள்மருாது.

உள்ளுக்குதாள்மருந்து கொல்லங்கோவை வன்றுக்
கிழங்குமப்பைக்கிழங்குடனே

தெள்ளியதலைச்சுருளிவேரிவை! திருந்தவிடுத்துத்தெ
ள்ளிவெறுகடிதாள்
அள்ளியதைவெந்நீரில் கரைத்துக் கொள்ளவிஷங்க
ளெல்லாங்குடிப்போமே
வெள்ளைக்காக்கணைமுழுதும் பொடிசெய்து வெறுகடி
கொணடிடவிஷமகலும்

ஆக்கிராணம்

மூக்கிலாக்கிராணஞ்செய்ய பச்சைப்பாம்பு முழுது
மிரண்டுபிளவாகவகிர்ந்து
தாக்கியேவெய்யலிலே உலர்ந்தபின் சரியிடைமிளகி
ட்டிப்பொடியாக்கி
இடப்புறம்வலப்புறமும் மாறுமல் இரண்டும்வெவ்வே
றுகவில்க்கமிட்டு
படப்பொறியரவப்பல்லு வலப்புறம் பதியில்வலது
தாள்வலமூக்கிலும்
இப்புறந்தன்னிற்றீண்டில் இடதுதாள் இடதுமூக்கிலு
மாகவேற்றுடனே

பாக்கிற்கொடுக்குமருந்து.

வீடுமுயிர்பிறந்திடுமே பரக்கில் விரவிக்கொடுக்கவட்
டத்துத்திவேரும்
கொம்மட்டிமாதுளைவேர் சிற்றவரை கொடியமிளகர
ணைவேர்நாலும்

அம்மிமிலைாத்துலர்த்தி விஷத்துக்கு அடைக்காயிற்
கூட்டியருந்திடவே
தேரேறிவருகதிரோன் தனையெட்டித் தீண்டுமிராகு
விஷந்தீர்ந்திடுமே

சோற்றிற்கொடுக்குமருந்து

போானவிஷத்திற்கெல்லாம் சோற்றுடன் பிசைந்து
கொடுக்கப்பழுபாகற்கிழங்கும்
சிந்தில்வேர்காட்டுக்கரணை அமுக்கிரா சிறுகாஞ்சோரி
யெட்டிமருக்காரை
சரக்தமாங்கறிப்பாலை வெமத்தை சாரணை பேய்ப்பீர்க்
கஞ்செப்புநெருஞ்சி
வேற்றிலைகனவாழை முட்புறண்டி விளங்குமவுரிபதி
னறுவகைப்பும்
பற்றறவிடித்தெடுத்து வடிக்கட்டி பழவரிசியிலரைப்
படியெடுத்து
அரைப்படியெடுத்துக் கலந்துபின் சோறுசமைத்
துக்கொள் திமீளுவிஷம்
ஊழ்வினைப்படிவரினும் ஓடிடும் உண்மையீதென்று
சொன்னார்வண்மைபெறவே

எள்ளிற்கொடுக்குமருந்து.

எள்ளினிற்றிருகுகள்ளிப் பால்கலந் திரவியடவுலர்த்தி
பரவுபல்லால்

வெள்ளவேகடித்ததென்றால் ஒருபிடி எள்ளைக்கொடு
க்கவிஷமிறங்கிடுமே
பழந்துணிதனிற்றேற்றாப் பழத்தினைப் பதமாத்தடவி
யதைநிழலுலர்த்திப்
புழையுருமெயிற்றரவங் கடித்திடில் புனலிற்கரைத்து
க்கொள்ளப்பொறகொடியே
எடுத்திடுங்கோழைக்கட்டு நெஞ்சடைப்பும் இல்லைச்
சிரத்துவிஷமிறங்கிடுமே

கலிக்கம்.

மடுத்திருகண்ணிலிட்க் கலிக்கம் வயங்கித்தெரியும்படி
பியம்புகிறேன்
கந்தகமகிழ்விதையோ டிரதமும்க சிந்திடுபெருங்கா
யம்வசம்பதுவும்
உந்துகிபேய்ப்பீர்க்கன்சாற்றில் அரைத்ததைச் சுந்தரி
வயிற்றினிற்றிளைத்துவைத்துப்
சந்துவாய்பொருந்தக்கட்டி முகட்டினில் தட்டாமற்
றூக்கிவைத்தே தட்டாந்தினம்
தந்திரமாயெடுத்துக் குழிக்கலில் தழுவவரைத்துரு
ட்டிநிழலுலர்த்தி
விடந்தலைக்கொண்டுநின்றே பற்கிட்டி விடலுமிழ்நீரி
லுரைத்திடில்மீளும்

மடைந்தையே யின்னமுங்கேள் பெருங்காயம் மருவுகெ
ந்தமுடன்பொரிகாரம்
தாரமுமாம்பிசினும் பேய்ப்பீர்க்கன் சாற்றிலரைத்து
க்கயறுசேர்த்துலர்த்தி
கூரியவிஷத்திற்கெல்லாம் கண்களிற் கொஞ்சமுரைத்
திடஅவையஞ்சியகலும்

உள்ளுக்குத்தைலம்.

வஞ்சியேதைலமொன்று செய்யும்வகை மதித்துக்கேள்
பேய்ப்பீர்க்கின்விதைப்பருப்பு
மிஞ்சாமலோருபடியில் ஐந்நூறு வெற்றிலையின்சாறு
விட்டரைத்துக்
கனிம்புறும்வெண்கலத்தில் அப்பியேகதிரவன்முன்
பேமுகன்னவிருக்க
வழிந்திடுந்தைலமதைப் பத்திரமாய் வைத்திருந்தா
வின்பல்லைதத்தவுடன்
சூதமுங்கந்தகமும் இருபங்கு துங்கத்தைலநாலுபங்கு
கூட்டி
தாதுயர்தைலமதைப் பணவிடைதடவி நாவற்கோருந்
திற்றரம்விஷம்போம்

குமேடாரித்தைலம்.

வயங்கும்குடோரியிடுந் தைலத்தை வாய்ப்பாகச்சொ
ல்லுகிறேன்கேழ்ப்பாய்பெண்ணே

பயன்பெறுமிழிஞ்சிவிதைப் பருப்பது படியொன்று
முடக்கொத்தான்கொடியினிலை
உத்தமதாளியிலை இரண்டையும் ஒருமிக்கச்சாறுபிழிந்
துப்பத்தரைத்துக்
கற்றுவின்பாலுங்கூட்டிப் பிசைந்தொரு கலத்தினிலப்
பியதைக்கதிர்முன்வைக்க
வடித்திடுந்தைலமங்கே சிரசின் மத்தியிலும்பிடரியுங்
குத்திக்கிளறி
மடிந்திடுஞ்சடமெனினும் தைலத்தை மயலரத்தேய்த்
திடவுயிர்வருமே

வாய்மூக்கில்விடுந்தைலம்.

வாய்மூக்கில்விடத்தைலம் எட்டிவிதை வழுவிலஞ்சி
விதைகழுதையெலும்பு
ஒய்வருகுரலோரி முதுகெலும்புந்துமுதலையெலும்மை
ந்துவகையும்
பானையிற்புதைதைலம் இறங்கியே யாணிதன்னிலடைத்
துப்பத்திரஞ்செய்து
மானிடர்தமையரவம் கடித்தேறி மண்டைகொண்டா
ல்விஷம்வாய்மூக்கினில்
தைலஞ்சற்றேவெதுப்பி வசம்பினில் தாளனைத்தொரு
துளிதனைவிடுக்கில்
செயலற்றுக்கிடந்தபிணம் உயிர்வந்துதிடமாயெழுந்
திருக்கும்மடமாதே

மூறுக்கரவுகடிக்குமருந்து

மூறுக்கரவதுதீண்டில் உடல்முற்றும் மூறுக்கிநடுக்கிக்
குளிர்பிறக்குமெனில்

உரைத்திடுமிளகுபொடி பாகற்சாற்றுடன் கலந்தருந்
திடவிஷமகலுமே

நிலப்பனங்கிழங்கரைத்துக் கொடுத்தாலும் நெடிய
மூறுக்கரவின்விஷநீங்கும்

மயக்கரவுகடிக்குமருந்து

தலைப்படுமயக்கரவங் கடித்திடில் தங்குறிப்பாலையின்
வேர்நுங்கவிஷம்போம்

மயப்படுமிளகுபொடி காய்ந்தவோட்டில் படுத்திழுகத்
திற்புகைகொடுப்பதுமாம்

செயப்படுவிரியனெனும் அரவது செனித்திடுமிடத்
தினைச்செப்புகிறேன்

நாரணன்சோதரியாள் திரிலோக நாயகிபருப்பதரா
யன்மகள்

காரணிபஞ்சபாணி திரிபுரைகருணி தருணிவீரிகங்கா
சேகத்திலெண்ணுன்காமும் வளர்த்தென்றும் மகத்துணி
வம்பெற்றிருக்குமகமாயை

இகத்தினிலடியவர்க்குச் செல்வமும் பரத்திற்கதியும
ருள்பகவதிநீள்

குஞ்சரமுகமுடையான் தன்னையும் குகனையும்பெற்ற
 உத்தகொற்றவை நன்

பஞ்சினும்மெல்லியதாய் சிவந்திடு செஞ்சிலம்பலம்பிய
 சீறடியாள்

மருதளனத்துறையு ஈசர்தம் வாமத்திலிருந்திடுமக
 ராசி

சுருதியின்முடிவில்நின்ற திருமிகு சுந்தரிநிரந்தரிதுரந்
 தரியாள்

அழகியநாயகியாள் திருவரை ஆடையிற்றோய்ந்தி
 பிரத்தமதில்

விழைவுடனேபிறந்து வளர்ந்திட்டு விரியனெனப்பெ
 யர்கொண்டெரிதவழும்

கான்முற்றுந்திரிகின்ற உரகத்தின் கடிக்குநசிகமதுக
 ழறுகிறேன்

விரியன்கடிக்குமருந்து

தேன்முட்டினிலேநசிகம்விட்டுடன் திரும்பவரைதுப்
 பூசதீரும்விஷம்

உள்ளுக்குப்பெருவாகைப் பட்டைச்சாறுழக்குசெய்
 யாழாக்கோடுறைமிளகு

விள்ளுமோர்காற்பலமும் பொடிசெய்துவிரவிக்கொ
 டுக்கவிஷமீண்டிடுமே

வசந்திடும்பாகலிலைச் சாறொரு காற்படியில் காற்பல
 மிளகரைத்துப்

பிசைந்துடன்கரைத்துட்கொள்ள உடலது பரிந்தவிரி
யன்விஷம்பறந்திடுமே
ஆப்பினையறைந்ததுபோம் விரியன்பல் அழுந்தக்கடி
த்துவிஷமதிகரித்தாம்
வேப்பெண்ணெயாழாக்குக் கொடுத்திட மீண்டுங்கடி
வாயின்வீக்கமும்போம்
ஊழ்நின்வலியாலே விரியன்உரைத்துக் கடித்தலுவிஷஞ்
சிரத்திற்கொண்டால்
விழியின்பழமரைத்துப்பசுவின் வெண்ணைதனிலரு
ங்கமீண்டிடுமே
சந்திரந்தைத்ததுபோல் விரியன்தாண்டிக்கடித்துவிஷ
மூண்டுகொண்டால்
சித்திரமூலியின்வேர் பொடிசெய்து தேனுவின்பாலிற்
கொள்ளத்தீர்ந்திடுவே

உப்புமருந்து.

கறியுப்பும்பதக்கசிந்து காட்டுக் கருணைக்கிழங்கு
கொடிவேலிவேரும்
யொறியுற்வகோழியவரை வேரிவை போதவேயாறு
பலம்நிறுத்தெடுத்துக்
குறைவறவிடித்துக்கொண்டு உப்பினில் கூட்டிக்கலந்
திரண்டுகூறுசெய்தே
சிறுத்திடும்பானையிலே ஒருபங்கைத் திடமுடனேயாய்
பிச்செகுத்திட்டதோர்

நறமிரும்பெருவிரியன் தனைவைத்து மற்றொன்றுமதி
னமேற்பரப்பித்
திறமுடன்வாய்மூடிச் சிலைசெய்து திண்ணமாய்மண்ட
லம்மண்ணுள்வைத்தே
எடுத்திவிரியன்கடிக்கு நீரினில் இதமுடன்கரைத்துள்
ளுக்கீய்ந்திடவே
அடுத்திடும்விஷநடுங்கிப் பறந்திடும் அன்னநடையே
கேளாயின்னமொன்று

வீக்கத்திற்குப்பூச்சுமருந்து.

வீங்கிடிற்பூச்சுமருந்து தக்காளி வேர்நீலிநாயுருவி வே
ருங்கூட்டிப்
பாங்குடனரைத்துக்கொண்டு வீக்கத்தில் படிந்திடப்
பூசவேவடிந்திடுமே
எருமையின்சாடிதனை எருக்கன்பால் இள்கவிட்டரை
த்துக்கடிவாயிற்பூசக்
கருநிறநீர்விரியன் பற்பட்ட கடிவாயின்வீக்கமதுவடி
வாகுமே
தேகத்தின்மேற்பூசப் பெருங்காயம் சிறுசின்னிவசம்
பிணைசிறுநீரில்
பாகமாயரைத்துடம்பிற் பூசிடப்பறக்கும்விரியன்மூறு
க்கரவுக்குமாம்
தக்காளிரண்டுவகையும் காடிவிட்டுச் சமூலந்துவைத்
துச்சாறுதனைப்பிழிந்து

பிக்காணவிரியன்விஷம் மெய்கலந்து மீறிற்றுவளைவிட்
மாறிடுமே
ஆடுதின்றுப்பாளையிலை தன்னை அடைவுடன்வச்சிரப்
பாலிவிட்டுக்
கூடியமூன்றுநாள் உலர்த்திக் கூறும்விரியன்வகையாறு
வகைக்கும்
நலம்பெறச்சூரணஞ்செய்து வேப்பெண்ணெய் நாழி
யரைப்படிதுள்நன்றுயிட்டுங்
கலந்துவெந்திறக்கிக்கொண்டு தைலத்தைக் கையி
லெடுத்துடனேமெய்யிற்றடவப்
பறந்திடுங்கொடியவிஷம் வீக்கத்திற் பற்றுமழலைதணி
யக்கட்டுமருந்து
சிறந்திடுங்கொவ்வையிலை தாளிப்பூந்திருந்தவேகாடிச்
சோறுடனரைத்து
சேதாவுநெய்யுங்கூட்டி வீக்கத்தில் திடமாகக்கட்டிடப்
போம்மடமானே
மீதாகக்கடித்தெரிந்தால் பூச்சொன்று விளம்புகிறேன்
பச்சைமுருக்கழஞ்சி
பாலையிலையகத்திதுழாய் இருதும்பை பருத்தியிருபாக
லிருகொவ்வை
நீலிநற்குவிகெடுப்பை உப்பிலி நிகழ்த்தியவிலைவெல்
லாம்துவைத்தெடுத்மிக்

காடியிற்கரைத்தடுப்பில் காய்வித்துக் கனலறவாற்றி
க்கடிவாயிலிடே

தேள்-விரியன்-மண்டலி-செய்யான்

இவைகளுக்கு மருந்து

காடிபவிஷந்தீரும் தேள்விரியன் நல்லமண்டலிசெய்
யான்வல்லிசோர்வுக்கும்
ஆகாயத்தூளிற்புனல் விட்டிளக் அரைத்துக்கொதிக்
கவைத்துக்கடிவாயில்
வாகாகப்பூசிடவே பூசினகை வாங்குமுன்குளிர்ந்திடு
ம்வீங்கிற்கடிவாய்
ஏதஞ்சந்தன முலைப்பால் பசுவின்பால் இளநீர்பசலைநா
ற்றுழைவிழுது
மூவமாமிருவேலி இவையெல்லாம் முயன்றரைத்தெ
டுத்துக்கடிவாயிற்பூச
விக்கமும்கடும்கடுப்பெரிப்பும் வணிந்திடும் மெல்லிய
தானதலைமயிர்க்கருக்கிக்
கோக்குலவெண்ணெய்கூட்டி வீக்கத்திற் குழைத்துத்த
டவக்குடிபோய்விடுமே
ஆலியொன்றியமருபுறேன் பாகலில் அழற்றும்பிரண்
டைபிரண்டினையுமொன்றாய்த்
தாவற்றேபிடித்துக் காடிவிட்டுத் தணறாறவேகவைத்
துக்கீழிறக்கிற்

சூல்ரவம்விரியன் செய்யான மண்டலி சுறுக்கிடுந்தே
ள்சிலந்திநண்டுத்தெறுக்கால்
மேலேயிறுபடக்கடித்துக் கடித்தவாம் வீங்கிகடுத்தே
ரியல்வேததனைப்
பிடித்திடக்கடிவாயின் கடுப்பும் பெருத்திடும்விக்கமு
ஞ்சிறுத்திடுமே
இடித்திடும்கொவ்வையிலைக்கசாறுடல் எங்குந்துவளை
யிடமந் தம்விஷம்
நந்திடுங்குமேடோரிவித்தை தனைச்சொல்வேன் சுந்தரி
பிடித்ததன்னீருல்வளைந்து
சூர்திடும்உள்ளிவசம்பும் ஒன்றாக நந்தாமல் நல்லெண்
ணெயினன்றாயிட்டு
வேந்திடக்காய்ச்சிறக்கித் தைலத்தை வெப்பவிஷ
மேறிமீறிச்செத்தால்
அந்தமாமவன் சிரத்தில் இறிமே விந்தையுடனேதேய்
க்கில் மீளுமுயிர்

விரியன் கடிப்புண்ணிற்கு மருந்து

விரியன் கடித்தவாயிற் கொப்புளித்து விரிந்துபுண்ணா
கிலுள்ளிவசம்புசுக்குச்
சரிவிடைநிறுத்துக்கொண்டுச் சுந்தரி சதைபுடைத்துத்
துச்சமன்கூட்டிக்காய்ச்சும்
சரியநல்லெண்ணெய்தன்னைப் புண்ணினிற் கீறிடை
யந்திசந்திபூசிடவே

18065

உரமலீபுண்கலெல்லாம் ஆறிடும் உண்மையீதென்று
சொன்னருயர்சித்தர்தாம்
சஞ்சீவியானதைலம் இன்னமொன்று சாற்றுகிறேன்
பச்சைப்பாம்பதனை
அஞ்சிடாதடித்தரைத்து வேப்பெண்ணெய் அரைப்
படிதனிலதைக கரைத்துக்கொண்டு
வாட்டமில்லாதெரித்தே புண்ணிலிட மாறிடுமென்று
சொன்னார்மடமானே
நாட்டினிற் கோழியின்கால் இம்பூரா நவின்றிடுங்கீழ்
க்காய்நெல்லியின்வேர்
மஞ்சள்மிளகிந்துப்பும் சமனிடை மானேநல்லெண்
ணெயிலேவாகாவிட்டு
எஞ்சவேகொதிக்கவைத்து முதிராமல் இறக்கயேபு
ண்ணிலிடம்பறக்குமென்றார்

புண்ணிற்குக் கட்டுமருந்து

கட்டுக்கோழியீரல் நாளெட்டுக் கடிவாயிற்புண்ணாறி
விடுமானே
திட்டனெனுஞ் சீதமண்டலி கடித்திட்டால் சொல்லு
றேன்கேள் வெகுநல்லமருந்து

சீதமண்டலிக்கடிக்குமருந்து.

முற்றியதேங்காயைஅருந்திடச் சற்றும் நில்லாமல்வி
ஷந்தானகலுமே

மூத்திருக்குஞ் செவியதனைக் காடியில் மூதிரவேலை
வித்தேயாவிகொடுக்க

சொறிமண்டலிகடிக்குமருந்து

விரைவுடனகன்றிடுமே சொறியுறு விஷமிகுமண்டலி
கடித்ததென்றால்
நரைமிருநன்னாரிவேர் பாலுடன் நாள்மூன்றருந்திடத்
தாழ்வாகுமே

வீங்குமண்டலிகடிக்குமருந்து

வீங்குமண்டலிகடித்தே கடிவாய் வீங்கிலமூக்கிருவேர்
குறைவேர்
தாங்கியபுங்கன்வேரும் இண்டைவேர் தக்காளிவேரி
ருப்பைவேருங்கூடி
அமுறிவிட்டரைத்தெடுத்துப் பூசிட அலர்ந்திடும்விக்
கம்தொழிந்திடுமே

திமிர்மண்டலிகடிக்கு மருந்து.

திமிர்மண்டலிகடித்தே திமிர்ந்திடில்தீரும் பொன்மூ
சுட்டையின்வேரருந்தின்

வழலைவகை நான்கின் கடிக்குமருந்து.

வழலையோர்நான்கு வகைக்கும் பாவினில் வாரக்கிழங்
கருந்திற்றீரும்விஷம்

சாணகமூக்கனுக்கும் கொம்பேறு மூக்கனுக்கு மருந்து

பழகுசாணகமூக்கன் விடத்திற்கும் படர்ந்திடும் கொம்
பேறுமூக்கனுக்கும்

வன்னியிலேதனைத்துவைத்து காடிவிட்டு வடித்தெடுத்
தரைப்படி கொடுத்ததனைச்
சென்னிமுதலுடல்முற்றுந் தேய்த்திடத் தீரும்விஷ
மென்றுசொன்னார்செய்யபெரியோர்
பிரண்டையின் வேரரத்தைப் புன்னைக்காய்ப் பிரமா
ணம் வெந்நீற்பருகிடினும்

புடையன்கடிக்குமருந்து.

திருப்பிடும்மூக்கன்விஷம் புடையனில் செப்பிநோல்
வகைச்செந்துக்கள்தாம்
துள்ளியேபற்கள்படக் கடித்தவாய் தூணென்னவீங்கி
யேவெயிர்வருர்யில்
ஒள்ளியகாட்டுக்கரணை கிழங்கும் உயர்ந்திடுப்புகை
பூரல் கொட்டைக்காரநதை
இருப்பையின்பழக்கோதும் அமூரிவிட் டிளதவரை
த்துப்பூச்சிடிலேகும்
வரியுருங்கட்டைப்புடையன் கடித்திடில் வசம்புட
னெருக்கம்பால்புற்றின்சோறு
புகைத்திடநாசியிலே விஷமது திகைத்தோடுமென்
றொருகணத்தினிலே
பகைத்திடுநெடுங்கழுத்துப் புடையன்பல் பதிந்திடக்
கடித்திடிற்படமயக்கிக்

இழுங்கிணப்பாவிலருந்த விஷம்விட்டுக் கிட்டமாவா
டிவிடுந்திட்டமுடனே
வழங்கியபுகையூரல் நீலியிலை வுடிசுண்ணமிருப்பைக்
கட்டிகொடிகள்ளிப்பால்
விட்டரைத்துப்பூசிடினே வீக்கும் விலகிடுமினியொ
ன்றை விளம்பிடக்கேள்
ஓட்டுறம்விழியின்பூ அரைத்துண்ண ஒருநாலுபுடை
யன்விஷமொழிந்திடுமே

நாய், குரங்கு, பூனை, குதிரை, நரி, சிறுபுலி, முதலை,
வேங்கை இவைகளின் கடிக்கு மருந்து.

நாய் வானரம் பூனை துரகம் நரி சிறுபுலி காரமெரு வே
ங்கை
தீயவிவ்வெட்டுவகையும் கடித்திடில் தேடிநீலினிராவி
ணபாவிலரைத்தே
மூன்றுநாளருந்திடவே ஓடிடும் மூர்க்கமிகுந்தசோர்வு
கடித்ததென்றால்

சோர்வுகடிக்குமருந்து

வாஞ்சியபனைவெல்லத்தில் எருக்கம்பால் ஓரேழுதுளி
விட்டுஉண்ணவேழுநாள்
வுகன்றிடுங்கருஞ்சோர்வு கடித்திட்டு அங்கத்திற்று
கபபுற்றுக்கடித்ததென்றால்

சுகந்தநன்னாரிவேரும் புங்கின்வேர் சொல்லுஞ்சிறிய
நங்கைவேரும்பாலில்
கலந்துண்ணமூன்று தினம் நீங்கிடும் கணற்றும்பெருஞ்
செய்யான் கடித்ததென்றால்

செய்யான்கடிக்குமருந்து

நலம்பெறுகோவையிலை வெற்றிலை நல்லபருத்திகொ
ஞ்சிவல்லுத்தாமணி
களங்கமில்முடக்கொத்தான் இவையாறும் கசக்கிச்
சாறுபிழிந்து காய்ச்சித்தடவக்
குளிர்ந்திடும்கடுப்பெரிப்புற் தம்பலம் கொட்டுவாயி
லுமிழந்தாலும் விட்டுவிடுமே
துத்துவேளை நாவலிண்டை வேரரைத்துச் சுற்றிக்கடி
வாய்தனிற்பற்றத்தடவத்
தீதுற்றசெய்யான்விஷம் உடன்விட்டுச் சென்றிடுமெ
ன்றுரைத்தார் கெண்டைவிழியே

ஆறுபுள்ளி வண்டுக்கடிக்கு மருந்து.

ஆறுபுள்ளிவண்டுக்கடித்தே கடுத்தெரிப் பாகிற்பழங்
கூடியிற்பாகயிலையை
மாறிடவேகவைத்து ஆவியை வாகாக்கடிவாயிற்கக்
டவாங்கும்விஷம்
சரக்கொன்றைவேரரைத்துப் பாலினில் சாப்பிடக்
கொடுவிஷந்தானகலுமே

காட்டட்டைக் கடிக்குமருந்து.

நெருக்குற்றவனத்தினட்டை கடித்திடில் நெரும்புண
முருங்கை சூரியின்வேர்
ஆசிலாவேப்பம்பட்டைத் தைலத்தில் அரைத்துக்
கொடுக்கவிஷமகன்றிடுமே

தேள்களுக்கு மருந்து.

வீசியதேளினுக்குக் கோழியெச்சம் வெற்றிலையிற்
கொடுக்கவிஷமகலும்
கொல்லன் கோவைக்கிழங்கரைத்துக் கொடுத்திடக்
கொடிதான கருந்தேளிள் விஷமறுமே
நல்வெள்ளெருக்கம்பால் சீலையில் நனைத்துமயிலிற
குதனிற்சுற்றியே
கோழியெசசமேற்றடவி வைத்துலர்த்திக் கொடிய
பன்னிருதேளுங்கொட்டிற்றென்னிலவ்
வேளையீற்றிக்கொளுத்திக் கொட்டுவாயில் மெல்லப்
புகைக்கவிஷமில்லைக்கடும்பும்
நட்டுவாய்க்காலிகொட்டிக் கடித்திடில் நன்றுவழுது
ணங்காயொன்று வெதுப்பிக்
கட்டிடவிஷந்தணியும் எட்டிவிதை கழற்சிக்காய்பிர
மாணமிழைத்துப்பூசக்
கடுப்புடனெரிப்பொடுங்கும் பழம்புளி காடிதனிற்க
ரைத்துச்சாடியிற்பெய்தே

அடுப்பினிற்கொதிக்கவைத்துக் கொட்டுவாயில் ஆவி பிடிக்கவிஷம்போய்விடுமே

ஆகாசத்தூளையெருமைச் சாணிப்பால் விட்டரைத் துக்கொதிக்கவைத்திட்டவாயில்

நீகாசினை வெடுத்துப் பூசிடில் நின்றிடுங்கடுப்பெரிப் பகன்றிடுமே

எலிகளின்பெயரும் அவைகளின்கடிகளுக்குமருந்து.

எலிக்குலம்பதினெண்வகை அவைகளை இயம்புகிறே ளெவர்க்கும்நயம்பெறவே

வலிக்குங்கத்திரிமணியன் செம்மூக்கன் வள்ளிகுறட் டைக்குங்காற்றலையன்

விடவேலிசெந்தலைமுத்தி செவ்வெலி வீங்கெலிஉவர்ப் பெலிதூங்கெலியும்

புடைபெலிஇரைபபெலிபும் செங்கண்ணன் புள்ளி காடனகுறுங்காலெலியும்

நச்சிசெவியீரொன்பதும் கடித்திட்டு நாகாலுமேமவிஷந் தானேறினல்

பஞ்சையாதானையின்மணி ஒருபடிபாலிலரைத்தருந்தி னலகலுமே

உத்தம்விரகுகொணர்ந் திடித்ததை ஒருபாண்டத்தி னில்வைத்தொருகிடங்கில்

கெவித்ததனையிருத்திக் கழுத்தின்கீழ் பெருழிவாய்ம
றையமூடிவிட்டுப்
பக்கத்தில்நாள்வழிபோல் பறித்தந்தப் பாண்டத்தின்
கீழநல்மூண்டிடச்செய்து
தொக்கினிற்புதைத்திடவே எலிவிஷம் கக்கியர்வுட
னேகழிந்திடுமே

சிலந்திகடிக்குமருந்து

சிலந்திபோரிருபதினில் அழல்வாய்ச் சிலந்திக்குச்சுண்
ணாம்பும்பழப்புளியும்
கலந்தந்தக்கடிவாயில் தேய்த்திடக் கடுப்புமெரிப்பு
முடன்விடுத்திடுமே
ஆவிவிரைதாளிபசலை காடிவிட்டவித்திட்டுக்கடிவா
யில்குவித்துக்கட்ட
காவுரைசெயவேண்டுமோ எரிப்பெங்கும் நாடிடுமோ
பறந்தோடிடுமே
இருபதுவகைக்குமொன்று மருந்தொன் தேலவுப்பர
பேன்மிராய்வேர்சீவியின்வேர்
தரிபின்பாலிற்கொடுக்க முப்பொழுதில் துறந்திடு
முயிர்வந்துதிறந்திடுமே

வண்டுகடிக்குமருந்து.

வண்டுகடிவெகுவிதமாம் அதற்கெல்லாம் வண்டுகொ
ல்லிமறைப்பட்டைமைபோலரைத்துக்

கொண்டுபுன்னைக்காயளவு நாளெட்டுக் கொடுத்திட
வண்டுகடிவிடுத்தோடுமே
தயந்திகழ்பங்கம்பாளை வேரினைக் காடிசடையனுதி
னங்கடித்தருந்தப்
பயந்திடும்வண்டுகடி சங்கின் பரித்திடுமேரின்மேற்றோ
ல்முறுக்கினெற்றும்
அளவெட்டுநாளருந்தி உப்புப்புளி அகற்றிடில்வண்டு
கடிதிகைத்திடுமே

குரங்கின்கடிக்குமருந்து.

குழுக்கொண்டுமரங்களிலே குதித்திடும் குரங்குகடிக்
கிற்சுக்குக்கொஞ்சியின்வேர்
நீரினிலரைத்துடம்பிற் பூசிட நீங்கிடும்விழியினிலைச்
சாற்றிற்
கூறிரும்பிளகுபொடி ஒருபலம் குழைம்பிவெளியில்வை
த்துக்கொழுநுரையைப்
புண்ணினிற்பூசிடவே யுலர்ந்திடும் பூத்திடுங்கொஞ்
சியிளாத்தியிலே
கணப்பிக்கண்டைகொணர்ந்து வறுத்தோத்தக்கட்
டவிழ்ந்தட்டுகெட்டுவிட்டுவிடுமே

பச்சோந்திகடிக்குமருந்து.

பச்சோந்திகடித்திட்டால் தருதாழை பண்ணைபரட்
டையிலைநண்ணுஞ்சிறுநீர்

மிச்சமாய்விட்டரைத்துக் கடிவாயில் மெள்ளப்பூசி
யாத்தியிலைத்தெள்ளுபொடியை
வெண்ணெய்தனிலிட்டுக்காச்சி நாசியினில் விடுத்து
வீக்கத்திற்றடவிடக்குணமாம்

நாய்கடிக்குமருந்து.

மண்ணின்மிசைஞானிகடித்தால் ஆசறுமருந்துநன்
னாரிவேர்காந்தயிலை
உப்பெள்ளுப்புகையூரல் சிவந்த நாயுருவியிவ்வகை
யாறுமொன்றுபடுத்திச்.
செப்பமாயரைத்ததனைப் பூசியே உப்புச்சுண்டயிலை
துவைத்துப்பின்னதனை
வறுத்தொத்திக்கட்டநாயின் மற்பட்ட வாயிற்கடுப்
புத்தணித்தோயும்விஷம்

காட்டுத்தவளைக்கடிக்குமருந்து.

கடித்திடுங்காட்டுத்தவளை கடித்துடல் கருதிச்சொறி
யெழும்பிற்சறிலன்பொடி
கழஞ்சிரண்டகத்தியிலையிற் சாறொரு காற்படிதனிலு
ட்டுக்கரைத்தருந்திப்
[illegible]ழம்புகைத்துளுமுப்பும் வேலியின் பருத்தியினிலைச்
சாற்றிலிரைத்திடப்போம்

அரணைநக்கலுக்குமருந்து.

நக்கிடுமேனிலரணை உடலமுற்றும் நடுங்கிவெண்ணு
ரைதள்ளிநாக்குத்தடிக்கில்

சுக்கொடுவசம்புவெடுத்து சுட்டுபுன் சூரணித்தருத்தி
னுன்சாரணைவேர்
துவைத்தன்சாறுடம்பிற் பூசினும் தொலையுங்குருந்
துபணங்தோல்வேரும்
சவத்தருந்திடவாணை விஷமெல்லாம் துடித்தொடுங்
கிடும்ராக்குத்துடித்ததும்போம்

விஷகடியனைத்திற்குக்குழம்பு

விடமென்னப்பட்டவைக்கெல்லாம் குழம்பொன்று
விளம்புகிறேன்வெள்ளைபாஷாணம்
நடமிடுமிர ங்கெந்தி மனேசிலைறுறும் பெறுங்காயமு
டன்கூறுந்துருசு
நிம்பவிதையுடனேழும் சரிநிறை நேர்வாளஞ்சத்தி
செய்திரட்டிகூட்டி
கம்புமெருக்கம்பால்விட்டே அம்மியில் நபந்தேழுநா
ழிகைநயத்திப்பின்னும்
வேப்பெண்ணெய்விட்டரைத்து வழித்தொரு மேதிக்
கொம்பின்சிமிழிலபோதவடைத்து
பாம்புமுதலானவற்றின் பற்படும் பலபலவிடத்துக்கு
ம்பயத்தளவு
வெற்றிலைதனிற்கொடுக்க உடன்விஷம் மீண்டிடும்பற் ;
கட்டில்வெந்நீரில்
மத்திக்குழம்பதனைக் காற்றுவரும் வாயிலொழிக்கிட

பாம்புபிடிப்பதற்குக்கடகம்

பதறிமோறுஞ்சோறும் கொடுப்பது பாம்புகடியா
லைதைப்பற்றுதற்குச்
சித்தர்கள்செய்யுமுறை கைக்கடகம் சேர்த்திடமூலி
வகைசாற்றுகிறேன்
படர்ந்திடும்பங்கமமபாலை நீலி கறிப்பாலைகழற்சிசித்திர
மூலியின்வேர்
கடிந்திடுமாதுளைவேர் சித்திவேர் கள்ளிவேர்கற்றூரவ
ள்ளியின்வேர்
சிறுகிழங்கையின்வேர் புளியாரை செப்பிடும்பூவ
ரெட்டியின்சிறுவேரும்
குறுகிடுபேய்ப்பீர்க்கின்வேர் குன்றிவேர் கோடாசிலை
சிவமூலிகூடியதோர்
வேர்வகைபதினாறும் கொண்டுவந்து விருத்தமாசுத்தி
வலக்கரத்திலிட்டுப்
பார்தனிலெட்டுப்பணியும் பிடித்திடப் பழுதைபோல
கிடத்திடும்பதையாமல்

பாம்பின்வாய்கட்டவேர்முதலியன

விதித்திடிற்தடிப்பாமல் வாய்கட்ட வேரதுசொல்லுகி
றேன்பாரதனில்
உதித்திடும்கதிர்வாரம் தணிரக்கதிர் உதயத்திற்சென்
விலஞ்சியதனைசுற்றி

வட்டிசைவேரினிலே கர்ப்புகட்டி மாலைப்பொழுதின்
முக்கால்வலஞ்செய்து
உடம்பயிட்டுத்தரித்தே குளித்திசகன் உள்ளடைத்
திட்டுக்கடிக்கொள்ளவுரகம்
மீதக்கினுங்கடிக்கினும்வாய் திறவாமல் மெலிந்திடின்
கண்டவுடனலைந்திடுமே
மதிக்குநற்பச்சைபாம்பு பச்சேர்க்கு வாவிரண்டுந்து
ணிந்துமாறமல்
செம்பினிற்றகட்டித்துப் பொதிந்துடன் சிறுவிரற்கணி
மோதிரஞ்சோத்து
கம்பிக்கலகவிரலிலிட்டுப் பணிகலை நாடிப்பிடிக்கில்வாய்
மூடிடுமே

விஷமிறங்கவும் எற்றவுமோதிரங்கள்

செப்பின்தனைபரவம் பரிசிக்கும் வேளையிற்செவ்வ
லரிநீளும்வடவேர்
செய்துறுகாப்புக்கட்டிக் களைந்திட்டுச் செம்பிற்
பொதிந்ததிலிடும்பொழுது
மேற்றிசைவேர்பிடுங்கி வெள்ளியின் மின்னுக்கட்டி,
பொதிந்துதன்னவிருத்திக்
கூற்றெனவுரகம்பல்லால் வகிர்ந்திடின் குடதிசைவே
ரடைக்குக்குளிசமதை
சிரமுதற்கடிவாயின் வரைக்குநீ தேய்த்திறக்கிவிஷந்
திரும்பிடுமே

மருவரவக்கடிவாய் முதற்சிர மட்டும்வடக்குவேரிட்ட
குளிசம்
மேனோக்கித்தேய்த்திடவே தீர்த்திட்டவிஷமிஞ்சிற்ற
லைக்கொண்டுமேவிடுமே
மாநாகமுதலாகப் பலவிஷம் மானிடர் தமைபற்றிவதை
புரிந்தால்
மந்திரதந்திரத்தால் தியானத்தால் மணியினால்மருந்
தினால்தணிவுசெய்யும்
அந்தமிலபுகழ்படைத்த மருந்துவர் அணைவருந்திரை
வளர்கனைகடல்சூழ்
தரைமிசையொருநூறு பருவமும் சரிவரவேயிருந்து
தான்வாழ்த்து
திருமகள்விளங்கப்பெற்று பதினாறு சிறுவரைப் பெற்று
மூற்றிபெறுவாகளே

ஆசிரியவிருத்தம்.

வேதியன் முதனூற்சாதி
விடவராக்கடியுண்டோருக்
கோதியமந்திரந்தான்
மருந்தினாலுறுநோய்தீர்த்தோன்
சாதியின்மிக்கவேத்த
தலைவராய்ப்பிறந்துபின்னர்
போதில்வாழ்பிரம்மராகிப்
புகழ்வீற்றிருப்பர்தாமே
சித்தாரூடம்-மூற்றிற்று.

+-80658

விளம்பரம்.

எமது புஸ்தகசாலையில் தேவநாகரம், கிரந்தம் தெலுங்கு, இங்கிலீஷ், முதலிய பலதினுசுகளான பாஷா புஸ்தகங்களும் அடியில்கண்ட சாமான்களும் கிடைக்கும்.

புராணங்கள், இலக்கணங்கள், இலக்கியங்கள், அந்தாதிகள் கலம்பகங்கள், வெண்பாக்கள், பிள்ளைதமிழ்கள், சதகங்கள், மாலைகள், வண்ணங்கள், வேதாந்தங்கள், சித்தாந்தங்கள், ஞானநூல்கள், சித்தர் ஞான நூல்கள், வைஷ்ணவ நூல்கள், யாத்திரை நூல்கள், பூசைக்குரிய நூல்கள், தோத்திரங்கள், பதிகம் பத்துகள், பாடல்கள் கும்மி சிந்துகள் சங்கீதநூல்கள், கீர்த்தனைகள், நாவல்கள், இன்னும் பல புஸ்தகங்கள், சட்லா-ஷெடு புதுஇருநூல் பஞ்சாங்கம். புதியடைரிகள், காலண்டர்கள், ஸ்கூல்புஸ்தகங்கள் டிராயிங் நோட்டுகள். எக்ஸர்ஸயிஸ் ஷெ ஸ்டூடைன்ஸ் ஷெ பேபர் தினுசுகள். பென்ஸல் பேனா, பவுண்டன்பேனாக்கள் ஸ்டேஸனெரிசாமான்கள். இன்னும் பலவித புஸ்தகங்களும் கிடைக்கும் வேண்டுவோர் நேரிலும் தபால்மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்குவிலைசரஸமாக, கொடுக்கக்கூடும் தங்கள் விலாசம்தெரிவித்தால்புஸ்தகவிலைஜாப்பிதா இனாமாய் அனுப்பக்கூடும்.

எமது விலாசம்;—எஸ். வேணுகோபால் நாயுடு.

புஸ்தகஷாப் புதுமண்டபம், மதுரை.